**Press Release No.98** **Date:11.11.2021**

# TWITTER MESSAGE FROM HON’BLE GOVERNOR TODAY (11.11.2021)

Hon'ble Governor, Thiru R.N.Ravi discussed with Hon'ble CM Thiru M.K. Stalin over phone about the rescue and relief operations undertaken by the State Government in view of the heavy rains caused by the Depression in Bay of Bengal.

மாண்புமிகு தமிழ் நாடு ஆளுநர், திரு.ஆர்.என்.ரவி அவர்கள் மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர், திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக மாநில அரசு மேற்கொண்டுள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து கலந்துரையாடினார்.

*****

Hon'ble Governor, Thiru R.N. Ravi spoke to DG NDRF Thiru S.N. Pradhan, IPS, about the rescue and relief operations undertaken in Tamil Nadu in view of the heavy rains caused by the Depression in Bay of Bengal. NDRF has deployed 14 detachments and has more forces on standby.

மாண்புமிகு தமிழ் நாடு ஆளுநர், திரு.ஆர்.என்.ரவி அவர்கள் தேசிய பேரிடர் மீட்புப் படையின் இயக்குநர் ஜெனரல், திரு S.N.பிரதான், இ.கா.ப., அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த

தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் பெய்து வரும் கனமழைக்கு மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து விளக்கம் கேட்டறிந்தார். இதற்கு பதில் அளிக்கையில் இயக்குநர் ஜெனரல் அவர்கள் தேசிய பேரிடர் மீட்புப் படையின் 14 மீட்புக் குழுவினர் மற்றும் அதிக படைகள் தயார் நிலையில் உள்ளது என தெரிவித்தார்.

*****

Hon'ble Governor Thiru R.N.Ravi expressed his heartfelt gratitude to Hon'ble Prime Minister Thiru Narendra Modi and Hon'ble Home Minister Thiru Amit Shah for extending their support for relief and rescue operations and mitigating measures for the flood affected areas of Tamil Nadu.

மாண்புமிகு பாரத பிரதமர், திரு நரேந்திர மோடி மற்றும் மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர், திரு அமித் ஷா ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ் நாடு ஆளுநர் திரு ஆர்.என்.ரவி அவர்கள் தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு ஆதரவு அளித்து வருவதற்கு தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

**R.N.RAVI,**

**GOVERNOR OF TAMIL NADU**

---

Raj Bhavan, Chennai-22 Sd/-

Date : 11.11.2021 Addl. Director (PR)